Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 276/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 8

| | | | |
|---|---|---|---|
| Name: | பார்த்திபன் | Calling: | உதவி மருத்துவர் |
| Father's Name: | சந்திரன் | Religion: | |
| Village: | பர்கூர் | Age: | 41 |
| Taluk: | பர்கூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 25.03.2026 நேரம் : 12.30 PM

( எதிரி ஆஜர். )

அ.சா.8 முதன்மை விசாரணை.

நான் தற்போது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.09.2024 ம் தேதி வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் காலை 11.00 மணிக்கு பணியில் இருந்த போது காஞ்சனா என்பவர் திரு. விஸ்வநாதன், வயது 71, தேவஸ்தானம், வாணியம்பாடி என்பவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து வந்திருந்தார். அவரை விசாரித்தபோது மோட்டார் வாகன விபத்து ஏற்பட்டதாக கூறினார். அன்றே காலை 09.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது நான்கு சக்கர வாகனத்தில் அழிஞ்சிக்குளம் ஆஞ்சிநேயர் ஆலயம் செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடனும் நல்ல நிலையிலும் இருந்தார். அவரின் இருதயம் மற்றும் சுவாசம் இயல்பாக இருந்தது. அவருக்கு விபத்தில் இடது கால் பகுதியில் வீக்கமும், அவரது காலில் வடிவம் மாறி இருந்தது, வலி இருந்தது, கால் அசைக்கும் போது அதிக வலி இருந்ததால் அசைக்கவும் முடியவில்லை. அவரது காலில் இரத்த

நாளங்கள், நரம்பு செயல்பாடுகள் எல்லாம் நல்ல நிலையில் இருந்தது. அவருக்கு நுண்கதிர் படம் எடுக்க பரிந்துரை செய்தேன். அதில் அவரது இடது காலின் நடுப்பகுதிக்கும் கீழ்பகுதிக்கும் இடையில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது. உடனே அவரை மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். **விஸ்வநாதனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 03.09.2024 மற்றும் 23.09.2024 ம் தேதி விசாரித்தார்கள். நான் போலிசாரிடம் வாக்குமூலம் எப்போது கொடுத்தேன் என்றால் 03.09.2024. 23.09.2024 ம் தேதி எதற்காக என்னை விசாரித்தார்கள் என்றால் காயச்சான்று கொடுத்தற்காக விசாரித்தார்கள். என்னுடைய வாக்குமூலத்தில் விஸ்வநாதனுக்கு எந்த உடல் பாகத்தில் காயம் ஏற்பட்டு இருப்பதாக 03.09.2024 ம் தேதி விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அன்றைய தினத்தில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. புகார்தாரர் அவரது கணவருக்கு வலது காலில் அடிப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் நான் இடது கால் என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் என்னிடம் ஆஞ்சிநேயர் கோவிலுக்கு செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் தும்பேரிக்கு செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக சொல்லியிருப்பதால் எனது வாக்குமூலம் பொய்யானது என்றால் சரியல்ல. விஸ்வநாதனுக்கு ஏற்பட்ட காயம் வயது முதிர்வின் காரணமாக ஒருவர் தடுமாறி கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் எலும்பின் தன்மையை பொறுத்து ஏற்பட வாய்ப்புள்ளது. வயதானவர்களுக்கு எலும்பின் அடர்வு குறைய வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்பிருக்கிறது, எல்லோருக்கும் குறைய வாய்ப்பில்லை. விபத்து பதிவேட்டில் விஸ்வநாதனுக்கு ஏற்பட்ட காயம் Since Injury என்று தான் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றாலும் சொற்பகாயமா அல்லது கொடுங்காயமா என கூறிவில்லை என்றால் விபத்து பதிவேட்டில் கூறவில்லை, காயச்சான்றிதழில் கூறியுள்ளேன். விபத்து நடக்கவில்லை என்றாலும் விஸ்வநாதன் எனக்கு வேண்டப்பட்டவர்

என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) பார்த்திபன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 276/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 9

| | | | |
|---|---|---|---|
| Name: | வெங்கட்ராகவன் | Calling: | வட்டார போக்குவரத்து அலுவலர் |
| Father's Name: | சாம்ராஜ் | Religion: | |
| Village: | திருப்பத்தூர் | Age: | 50 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 25.03.2026 நேரம் : 12.50 PM

( எதிரி ஆஜர். )

அ.சா.9 முதன்மை விசாரணை.

நான் தற்போது வாணியம்பாடி வட்டார போக்குவரத்து அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.09.2024 ம் தேதி வாணியம்பாடி மோட்டார் வாகன ஆய்வாளராக பணியில் இருந்த போது அம்பலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வேண்டுகோளிற்கிணங்க குற்ற எண். 276/2024 ன் கீழ் TN 63 B F 3908 எண் உள்ள இலகுரக சரக்கு வாகனத்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வில் அந்த வாகனத்தில் சேதாரங்கள் ஏதும் தென்படவில்லை. கால்தடைதிறன் 67 %, கைத்தடை இயங்கும் நிலையில் இருந்தது, அதன் அடிப்படையில் இந்த விபத்தானது எந்த இயந்திர கோளாறும் தென்படவில்லை என அறிக்கை வழங்கினேன். **அந்த TN 63 B F 3908 என்ற வாகனத்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதே வழக்கில் தொடர்புடைய மற்றொரு இருசக்கர வாகனம் TN 23 BX 4196 என்ற வாகனத்தை கடந்த 23.09.2024 ம் தேதி அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வில் வாகனத்தின்

முகப்பு விளக்கின் இடது புறத்தில் சிராய்ப்புகள் காணப்பட்டது. இடது பின்பக்க புட்ரஸ்ட் சிராய்ப்பு காணப்பட்டது. கால்தடைத்திறன் 65 % இதன் அடிப்படையில் விபத்தானது எவ்வித இயந்திரகோளாறினாலும் ஏற்படவில்லை என்று கருத்துரை வழங்கினேன். **அந்த TN 23 BX 4196 வாகனத்தின் ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

இருசக்கரவாகனத்தில் ஏற்பட்டு இருந்த சிராய்ப்புகள் சாதாரணமாக வண்டி கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். விஸ்வநாதன் என்பவர் TN 4196 என்ற வாகனம் தான் விபத்துக்குண்டானது என்று கூறியுள்ள நிலையில் அந்த வாகனம் சம்மந்தமாக ஆய்வறிக்கை கொடுத்தேனா என்றால் அதுக்குறித்து என்னால் கருத்து கூற இயலாது. TN 4196 என்ற வாகனத்தை பதிவு செய்யமுடியுமா என்றால் அதுக்குறித்து என்னால் கருத்து கூற இயலாது. இலகுரக வாகனத்தை எந்த தேதியில் ஆய்வு செய்தேன் என்றால் 10.09.2024. இருசக்கர வாகனத்தை எந்த தேதியில் ஆய்வு செய்தேன் என்றால் 23.09.2024. இரண்டு தேதிக்கு இடைப்பட்ட காலதாமத்திற்கான காரணத்தை எனது வாக்குமூலத்திலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் அதுக்குறித்து என்னால் கருத்து கூற இயலாது. விபத்து ஏற்படவில்லை என்றாலும் எங்கோ ஏற்பட்ட விபத்திற்காக போலிசார் என்னை வைத்து பொய்சாட்சியம் அளிக்க சொன்னார்கள் என்றால் சரியல்ல. எனது வாகன ஆய்வறிக்கையில் இருசக்கர வாகனம் விபத்து ஏற்பட்ட இடமாக எதை குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் அழிஞ்சிக்குளம் கூட்ரோடு அருகில் என கூறியுள்ளேன். விஸ்வநாதனின் ஓட்டுநர் உரிமம் எதையும் யாரும் என்னிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்திற்கு Fitness certificate ஏதேனும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இருசக்கரவானத்திற்கு அதுபோன்ற சான்றிதழ்கள் வழங்கப்படுவதில்லை, நான்கு சக்கர வாகனத்திற்கு மட்டும் தான் வழங்கப்படும். இருசக்கர வானத்திற்கான காப்பீடு சம்மந்தமான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட தேதியில் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும் போலிசார் சொன்னதின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) வெங்கட்ராகவன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K